# கிழக்கு மாகாண சபை - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

(அ) மாகாணசபையின் 2011 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2004 பெப்ரவரி 24 திகதியிட்ட 01/2004 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி 2012 மார்ச் 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இது 2012 ஏப்ரல் 27 இலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஏனைய நிதிக்கூற்றுக்கள்

2012 மார்ச் 31 இல் உள்ளவாறான ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | கணக்குகள் | 2011 ஆம் ஆண்டிற்கானது<br>நிதிக் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2012 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 2012 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 26 | 08 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் | 34 | 16 | 18 |
| (iii) | வர்த்தக முற்பணக் கணக்கு முயற்சிகள் | 09 | - | 09 |
| (iv) | நிதியக் கணக்குகள் | 02 | 02 | - |
| (v) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | 01 | - | 01 |
| (vi) | முன்பள்ளி கல்விப் பணியகம் | 01 | - | 01 |
| | | 81 | 44 | 37 |

(இ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கான கிழக்கு மாகாண சபை முன்பள்ளி கல்வி பணியகத்தின் கணக்குகள் கிழக்கு மாகாண சபையின் 2010 இன் 1 ஆம் இலக்க முன்பள்ளி கல்வி சட்டத்தினை 9(2) ஆம் பிரிவின்படி 2012 செப்தெம்பர் 21 வரை கூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பித்தல்

(i) 2004 பெப்ரவரி 24 ஆந்திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின்படி மாகாண சபையின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) 2004 பெப்ரவரி 24 ஆந்திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின்படி கிழக்கு மாகாண சபையின் கீழான 43 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

ஏற்பாடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தாமை, பாதீட்டு மதிப்பீடுகளில் ஏற்பாடு இல்லாமல் செலவினங்களைச் செய்தல், கணக்குகளில் நிலுவையான பொறுப்புக்களின் விடுபாடு, மீண்டெழும் செலவினத்தை மூலதனச் செலவினத்திற்குச் சாட்டுதல் செய்தலும் அதே போன்று மறுதலையாகச் செய்தலும், மூலதனச் செலவினத்திற்கு விபரங்கள் சமர்ப்பிக்காமை சேமிப்புக்களுக்குப் போதிய விளக்கங்கள் அளிக்காமை மற்றும் மாகாணத்திறைசேரிப் புத்தகங்களுடன் திணைக்களப் புத்தகங்களை இணக்கம் செய்யாமை போன்ற பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிலும் சில மாகாணசபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகளில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றத்தில் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 88,186,939 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை அறவிடப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று மாகாண அமைச்சுக்கள் மற்றும் பதினேழு திணைக்களங்கள் என்பவற்றால் ஓய்வுபெற்ற, இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 7,735,298 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு அமைச்சு மற்றும் ஆறு திணைக்களங்கள் ரூபா 2,922,868 தொகையான இனங்காணப்படாத மீதிகளுடன் இணக்கக் கூற்றுக்களை தயாரித்திருந்தன.

(ஈ) 10 ஆண்டுகளிற்கு மேலாக பல்வேறு வகுதியினரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 12,154,497 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சுக்கள்/ திணைக்கங்கள் | பெறவேண்டிய தொகை |
|---|---|
| | ரூபா |
| சுகாதார திணைக்களம் | 6,424,588 |

| | |
|---|---|
| கல்வித் திணைக்களம் | 4,134,055 |
| கல்வி அமைச்சு | 1,544,983 |
| மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 50,871 |
| மொத்தம் | 12,154,497 |

### 1.2.4 நிலுவையான கட்டு நிதி மீதிகளைத் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) ரூபா. 22,102,628 கூட்டுமொத்த தொகையான கட்டுநிதி மீதிகள் 13 மாகாணத் திணக்களங்களால் 2011 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாதிருந்தன.

(ஆ) பிரிவுக்கு முன்னாரன வடக்கு கிழக்கு மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 2010 வரையான கட்டுநிதி மீதிகள் ரூபா 14,285,728 ஆன தொகை 2011 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5. வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பெரும்பாலான முற்பண கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகள் தற்காலிக அடிப்படையிற் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தன. ஆகவே, கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் திருப்திகரமாகப் பரிசீலிக்கப்பட முடியாதிருந்தன.

(ஆ) வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகளிற் காட்டப்பட்ட பொருளிருப்புக்களின் பெறுமதி பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் இன்மையால் கணக்குகளிற் காட்டப்பட்ட பெறுமதிகள் உண்மையான பெறுமதியைக் காட்டுகின்றனவா என்பதைக் கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.

(இ) மாகாணத் திறைசேரியால் 09 வர்த்தக முற்பணக்கணக்கு நடவடிக்கைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் 02 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மட்டுமே செயற்பாட்டில் இருந்தன. இது தொடர்பாக, செயற்படாத வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை கலைப்பதற்கு மாகாணநிதி விதி இல. 286 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனை நிலைய முற்பணக்கணக்கு நடவடிக்கை தொடர்பிலான ரூபா 2,341,904 தொகையான செலவு மீதிகள் நிதிக் கூற்றுக்களில் புறம்பாக காட்டாமல் ரூபா 44,894,910 ஆக வரவு மீதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

### 1.2.6 வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நி.பி 571 இன்படி மீளாய்வாண்டின் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலங்கடந்த வைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 ஆண்டுகளிற்கு மேலாக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கணக்குகளில் இருக்கின்ற ரூபா 62,289,373 தொகையான வைப்பு மீதிகள் மீது நி.பி. 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மாகாணப் பாடசாலைகளைத் தவிர்த்து மாகாண அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் செயற்பாட்டிலிருந்த 132 வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 06 மாதங்களுக்கு மேலாக கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா. 2,377,462 பெறுமதியான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக 11 நிறுவனங்கள் மாகாண நிதிவிதி இல. 237 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களங்களின் பெயர் | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| ஆளுநரின் செயலகம் | 909 |
| மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு | 12,755 |
| உள்ளூராட்சித் திணைக்களம் | 1,813,124 |

| | |
|---|---|
| கிராமிய அபிவிருத்தி திணைக்களம் | 1,000 |
| கைத்தொழில் திணைக்களம் | 370,108 |
| சுகாதார சேவைகள் அமைச்சு | 32,896 |
| சுதேச வைத்திய திணைக்களம் | 8,345 |
| விவசாயத் திணைக்களம் | 600 |
| கல்வி அமைச்சு | 127,200 |
| கல்வித் திணைக்களம் | 3,745 |
| கூட்டுறவுத் திணைக்களம் | 6,780 |
| மொத்தம் | 2,377,462 |

மேற்குறிப்பிட்ட ரூபா 2,377,462 பெறுமதியான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மீளாய்வாண்டின் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

### 1.2.8 கணக்காய்வுக்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான 273 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2012 செப்தெம்பர் 21 வரைகூட பதிலளிக்கப்படாதிருந்தது

| ஆண்டு | வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | சதவீதம் % |
|---|---|---|---|
| 2010 | 481 | 253 | 53 % |
| 2011 | 215 | 20 | 09 % |
| மொத்தம் | 696 | 273 | |

**1.2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 - கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின்படி மொத்மான ஐந்து அமைச்சுக்கள் மற்றும் இருபத்தியொன்பது திணைக்களங்களால் மீளாய்வாண்டுக்கான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 - கொள்வனவு வழிகாட்டல்களின் 6 ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளின்படி பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் கொள்வனவுகளுக்கான கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

(iii) மா.நி.வி 432 இன்படி பல அமைச்சுக்கள் மறறும் திணைக்களங்களால் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மா.நி.வி 365 இன்படி 07 திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.2.10 மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணாக தாபன விடயங்களை அமுல்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பேரவைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து மாகாணசபையின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2008 மே 10 இல் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை அதன் அலுவலகள் பொறுப்பேற்றிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான மாகாண சபை நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினுடைய அறிக்கை 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி 2012 செப்தெம்பர் 21 வரை சபையின் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட 1999 யூன் 01 திகதிய பிடி/பிபி/9 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, மாகாணப் பொதுச்சேவை உத்தியோகத்தர்களது தாபன விடயங்களின் அமுலாக்கல்

இயன்றளவு நேரொத்த அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான நடைமுறைகளிற்கு இணங்கியதாக இருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறாமல் மீளாய்வாண்டில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்களாக ரூபா 6,579 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2008 யூலை 25 ஆந்திகதிய 16/2008 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் 05 அமைச்சுக்கள் ஊடாக மாகாண சபையின் 23 உறுப்பினர்களிற்கு அவர்களுடைய மாதாந்த சம்பளங்கள் எரிபொருள்படி மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக மாதாந்த எரிபொருள் படியாக ரூபா 8,280,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் காரணங்களினால் இந்தக் கொடுப்பனவு முறையற்ற கொடுப்பனவாக கருதப்படுகிறது.

- கொடுப்பனவுகளிற்கான அதிகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

- மாகாண சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களாலும் மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு ஒருங்கிணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன அல்லது சேவைகள் சமர்ப்பிக்கப்பட்டன என்று நிரூபிப்பதற்கு சான்றுகள் இருக்கவில்லை.

- மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு வேலைகளிற்கான உறுப்பினர்களின் வருகைப்பதிவு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, நிதிசார் விளைவுகளில் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியின் மிகை ரூபா. 405,024,524 ஆனதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா.

54,780,839 ஆனமையால் மொத்த மானியங்கள் மற்றும் உதவு தொகைகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக ரூபா 459,805,363 ஆல் நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 நிதிசார் செயலாற்றல்

மாகாணத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளின்படி, மீளாய்வாண்டிற்காக 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 29 திணைக்களங்களின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு, குறைநிரப்பு ஏற்பாட்டை உள்ளடக்கிய மொத்தத் தேறிய ஏற்பாடு, உண்மையான மொத்தச் செலவினம் மற்றும் சேமிப்புகள் என்பவை கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | மதிப்பிப்பட்ட ஏற்பாடு | குறைநிரப்பு ஏற்பாட்டை உள்ளடக்கிய தேறிய ஏற்பாடு | உண்மையான செலவினம் | சேமிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| மீண்டெழும் | 11,931.2 | 12,530.0 | 12,075.0 | 454.0 | 3.6 |
| மூலதனம் | 1,561.5 | 1,588.0 | 1,253.0 | 335.0 | 21.1 |
| மொத்தம் | 13,492.7 | 14,118.0 | 13,328.0 | 789.0 | 5.6 |

## 2.3 வருமானமும் செலவினமும்

மாகாண சபையின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஒட்டு மொத்த வருமானம் மற்றும் செலவினத்தின் ஒரு பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | உள்ள படியானது | முரண் | தேறிய ஏற்பாடு | உள்ள படியானது | முரண் |
| **வருமானம்** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** |
| அரசாங்க மானியங்கள் | 12,410 | 10,952 | 1,458 | 11,045 | 10,100 | 945 |
| ஏனையவை | 1,059 | 1,552 | (493) | 340 | 1,175 | (835) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 13,469 | 12,504 | 965 | 11,385 | 11,275 | 110 |
| செலவினம் | | | | | | |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 10,084 | 9,829 | 255 | 8.959 | 8,989 | (30) |
| ஏனையவை | 2,446 | 2,246 | 200 | 2,086 | 1,901 | 185 |
| உப மொத்தம் | 12,530 | 12,075 | 455 | 11,045 | 10,890 | 155 |
| மூலதனச் செலவினம் | 1,588 | 1,253 | 335 | 2,826 | 2,267 | 559 |
| முழு மொத்தம் | **14,118** | **13,328** | **790** | **13,871** | **13,157** | **714** |

### 2.3.1 உண்மையான ஆளணி

மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டு மொத்த அங்கீகரித்த மற்றும் உண்மையான ஆளணி என்பன கீழே தரப்படுகின்றன.

(i) மாகாணசபை நிறுவனங்களின் பதவியினர் (பாடசாலைகள் தவிர்ந்த)

| | **உத்தேச ஆளணி** | **உண்மையான ஆளணி** | **குறைவு/ (மேலதிகம்)** |
|---|---|---|---|
| பதவிநிலை தரங்களும் துணைநிலைத் தரங்களும் | 26,287 | 24,788 | 1,499 |
| சிற்றூழியர் தரங்கள் | 4,156 | 4,187 | (31) |
| மொத்தம் | 30,443 | 28,975 | 1,468 |

31 எண்ணிக்கையான சிற்றூழியர் தர ஊழியர்கள் மிகையாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

## 2.4 செயற்பாட்டு மீளாய்வு

மீளாய்வாண்டின் போது கிழக்கு மாகாண சபையின் சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயலாற்றுகை தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) ஆளுநர் செயலகம்

2011 யூலை 07 ஆந் திகதிய ஜீ/ஈபிசீ/ஏ/ஜீவீஆர்/ஏபிபிரீ(19) ஆம் இலக்க நியமனக் கடிதம் மற்றும் 2007 மே 11 ஆந்திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி என்பவற்றிற்கு முரணாக 2011 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான காலத்திற்காக ரூபா 29,055 இற்குப் பதிலாக ரூபா 40,000 ஆன மாதாந்தப்படி ஆளுநர் செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், ஆளுநர் செயலாளருக்கு மாதந்தப் படியாக ரூபா 52,929 தொகையான மேலதிகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய பிரீ/17/2011 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின்படி 2012 செப்தெம்பர் 21 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) மாகாண பேரவைச் செயலகம்

2008 யூலை 25 ஆந்திகதிய 16/2008 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சுக்களிற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஊழியர்களிற்கு மேலதிகமாக மாகாண சபையின் உறுப்பினர்களிற்காக முறையற்ற விதத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் போன்ற அத்தகைய 24 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் இது தொடர்பில் மீளாய்வாண்டிற்கான சம்பளங்களாக மாகாண சபை நிதிகளிலிருந்து ரூபா 3,328,800 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) முதலமைச்சர் செயலகம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வேலையற்ற இளைஞர்களிற்கு கொறிய மொழி வகுப்புக்கள் நாடத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதிகளில் முற்பணமாக ரூபா 2,000,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொறிய மொழி வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் பாடநெறிகள் தேவையானளவு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் 2012 செப்தெம்பர் 21 வரைகூட முன்னாள் முதலமைச்சரின் செயலாளரிற்கு செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) உள்ளூராட்சித் திணைக்களம்**

(i) இருப்புப் பதிவேட்டில் ரூபா 254,400 பெறுமதியான இருப்பு விடயங்கள் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னரான நிகழ்ச்சிதிட்டத்தின்படி, 64 எண்ணிக்கையான புலனாய்வு அறிக்கைகள் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக 02 நகர சபைகள் மற்றும் 08 பிரதேச சபைகளிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் புலனாய்வு அறிக்கைகள் 2012 செப்தெம்பர் 21 வரைகூட திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருககவில்லை.

(iii) ஆறு பிரதேச சபைகள் உள்ளூராட்சி திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) பிரதம வெயலாளர் அலுவலகம்**

(i) 2011 ஆம் ஆண்டின்போது பிரதம செயலாளர் அலுவலகத்தின் 920-3-2-1503 ஆம் இலக்க செலவின விடயத்திலிருந்து தகவல் வள முகாமைத்துவ நிலையத்திற்கு (சீஜஆர்எம்) ரூபா 1,300,000 தொகையான நிதிகள் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்குறித்த நிலையத்தின் தாபிப்பிற்கான கௌர ஆளுநரின் அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது ஒரு வாகனம் விபத்திற்குள்ளாகி இருந்ததுடன் அந்த வாகனத்தின் திருத்தங்களிற்காக ரூபா 483,708 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. அவற்றில் காப்புறுதி மேவுகைக்கு

மேலாக திணைக்களத்தால் திருத்தங்களிற்காக ரூபா 169,377 ஆன தொகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் நி.பி 104-109 இன்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) மாகாணத் திறைசேரி**

(i) பாதீட்டுக் கட்டுப்பாடு

ஏற்பாடுகளிற்கு மேலாக செலவினம் செய்யப்பட்ட பல சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. பாதீட்டு ஏற்பாடுகளை விஞ்சி ஏற்பட்ட செலவினங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பல குறைநிரப்பு மதிப்பீடுகள் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களிற்கு திறைசேரி நானாவித வாக்குப்பணத்திலிருந்து நிதிகளை மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது, ஆதலால் பாதீடானது யதார்த்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பாதீடானது வினைத்திறனுடைய நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமையைக் குறிக்கின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- கவ்வித் திணைக்களம், சுகாதரத் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் போன்ற அத்தகைய பல்வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மாகாண திறைசேரியால் நானாவித வாக்குப்பணத்திலிருந்து 35 குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக ரூபா 1,424,542,600 தொகையான நிதிகள் மாற்றப்பட்டிருந்தது.

- நிதிகளின் மாற்றத்திற்காக 63 எண்ணிக்கையான நி.பி -66 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டிருந்தது.

- 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 29 திணைக்களங்கள் என்பவற்றின் அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக முற்பணக் கணக்குகள் மற்றும் வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எல்லைகள் பதினாறு சந்தர்ப்பங்களில் பிரதம செயலாளர் மற்றும் பிரதி பிரதம செயலாளர் - நிதி என்போரால் திருத்தப்பட்டிருந்தன.

(ii) 2005 ஆம் ஆண்டில் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபையின் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு சுனாமிக் கடன் கொடுப்பனவிற்காக பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் முற்பணங்கள் வடக்கு மாகாண சபையால் செய்யப்பட்ட பகுதிக் கொடுப்பனவு செய்யப்படுவதற்குப் பதிலாக சபையின் நிதிகளிலிருந்து வருடாந்தம் ரூபா 20 மில்லியன் ஆகிய தவணைப்பணங்கள் மூலம் கிழக்கு மாகாண சபையின் மாகாண திறைசேரியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களால் ரூபா 445,171,857 தொகையான விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான (டபிள்யூ&ஓபி) பங்களிப்புகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டிருக்காததுடன் மாகாண திறைசேரியின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(iv) ஒவ்வொரு அமைச்சு மற்றும் திணைக்களத்தினதும் மீண்டெழும் செலவினத்தின் தனிப்பட்ட மீதிகளின் மொத்தத்துடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 272,981 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஏ) வருமானத் திணைக்களம்**

(i) 2011 திசெம்பர் 09 ஆந் திகதிய 222/2011 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின்படி மீளாய்வாண்டிற்கான வருடாந்த வருமானக் கணக்குகள் 2012 செப்தெம்பர் 21 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண நிதிவிதி 144(2) இன்படி மாகாண வருமானத் திணைக்களத்தால் வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண நிதிவிதி 142 இன்படி நிலுவை வருமானத்தின் அரையாண்டு ரீதியான திரட்டுகளும் தயரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கீழே காட்டப்பட்ட விபரங்களின்படி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமான சேகரிப்பு ரூபா 247,762,982 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

| வருமான சேகரிப்பு | மாகாண வருமான திணைக்களத்தின் படி மீதி | நிதிக் கூற்றுக்களின் படி மீதி | வருமானத்தில் குறைத்துக் கூறல் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வியாபார புரள்வு வரி | 117,136,878 | 41,751,200 | 75,385,678 |
| நீதிமன்ற தண்டப்பணம் | 47,254,506 | 16,075 | 47,238,431 |
| முத்திரைத் தீர்வை | 204,081,203 | 78,942,330 | 125,138,873 |
| | 368,472,587 | 120,709,605 | 247,762,982 |

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்கின்ற பிரதி ஆணையாளர், வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான 27 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அதிகாரத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அரசியலமைப்பிற்கான ஒன்பதாவது பட்டோலையில் பட்டியலிடப்பட்டவாறு என்பவற்றின்படி மாகாண சபைகளிற்கு கையளிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண திறைசேரிக்கு அனுப்பப்படாமல் திணைக்களத்தின் வங்கி சேமிப்புக் கணக்கில் ரூபா 368,057,163 ஆன தொகை பயன்பாடின்றியிருந்தது. இது சம்பந்தமாக சேமிப்புக் கணக்கிலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 17,035,654 தொகையான வட்டி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கல்வி, கலாசார அலுவல்கள், காணி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 458,106 தொகைக்கு வாகனக் கொட்டகை மற்றும் விளையாட்டுப் பிரிவு என்பவற்றின் நிர்மாணத்தில் பின்வரும் முறைகேடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 3.9.1 ஆம் பிரிவிற்கு முரணாக ஒரு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு (எஸ்டிஎஸ்) வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதிக்கு குறைந்தது 2 ஆண்டுகளிற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒரு சங்கமாக பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

- சம்பந்தப்பட்ட சங்கத்தின் பாடசாலை வளவு எல்லைக்குள் அதிகாரப்பிரிவு இருக்கவில்லை.

- சங்கமானது வங்கி கூற்றுக்கள் போன்றவற்றினை ஆதாரப்படுத்துவதன் மூலம் அதன் நிதி வளங்கள் பற்றி நிரூபிப்பதற்கான போதிய சான்றுகளை வழங்கியிருக்கவில்லை.

- வேலைகள் உப ஒப்பந்தமாக வழங்கப்படாததற்கான வெளிப்படுத்துகை சங்கத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

(i) நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதம்

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2009 இன் 02 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின்படி நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஆறு மாதங்களிற்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 15 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முறையற்ற நியமனங்கள்

- போதிய விளம்பரங்கள், உள்ளக அறிவித்தல்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் என்பன இல்லாமல் பல்வேறு பதவிகளிற்காக ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன.

- தேவைப்பட்ட தகைமைகள்/ ஆட்சேர்ப்புத் திட்டம் இல்லாமல் இரண்டு கிளைப்பொறுப்பு உத்தியோகத்தர்கள், மூன்று முகாமைத்துவ உதவியாளர்கள், இரண்டு போக்குவரத்து உத்தியோகத்தர்கள், இரண்டு மாவட்ட முகாமையாளர்கள், ஐந்து நேரக் கட்டுப்பாட்டாளரகள் மற்றும் ஐந்து நடமாடும் பரிசோதகர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

- பரீட்சைகள் திணைக்களத்திடமிருந்து பெறுபேறுகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மிகையான பதவியணி

கீழே தரப்பட்ட விபரங்களின்படி 37 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைவிட மிகையாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

| **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான பதவியண** | **மிகை** |
|---|---|---|---|
| தலைவர் | 0 | 1 | 1 |
| போக்குவரத்து உத்தியோகத்தர்கள் | 0 | 3 | 3 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 7 | 13 | 6 |
| திடீர்ப் பரிசோதகர்கள் | 4 | 5 | 1 |
| நேரக் கட்டுப் பாட்டாளர்கள் | 20 | 39 | 19 |
| சாரதிகள் | 1 | 3 | 2 |
| அலுவலக உதவியாளர்கள் | 1 | 3 | 2 |
| தொழிலாளர்கள் | 3 | 6 | 3 |
| மொத்தம் | 36 | 73 | 37 |

(ஓ) மாகாண கல்விப் பணிப்பாளர் திணைக்களம்

(i) தி/ அல்ஹம்றா மஹா வித்தியாலத்தில் பாடசாலை கட்டிடத்திற்கான திருத்த வேலைகள்

ஒப்பந்த உடன்படிக்கையின்படி வேலைகள் 2010 ஆகஸ்ட் 23 அன்று அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், வேலைகள் 2010 ஒக்தோபர் 04 இலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரிடமிருந்து ஒரு நாளிற்கு ரூபா 75 என்ற வீதத்தில் தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தி/ கல்லம்பத்து ஜீ.ரீ.எம்.எஸ் இன் கட்டிட நிர்மாணம்

மேற் குறிப்பிட்ட வேலைகள் 2010 யூன் 16 இல் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 செப்தெம்பர் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் பூர்த்தியாக்கல் அறிக்கையின்படி கட்டிடம் 2010 நவம்பர் 19 இல் ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டு 2010 திசெம்பர் 07 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், தாமதத்திற்காக ரூபா 25,827 தொகையான தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) அலுவலக கட்டிடம் மற்றும் மலசலகூட நிர்மாணம்

2009 ஆகஸ்ட் 06 இல் தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கலிற்கான திகதி 2010 சனவரி 23 ஆக இருந்தது. ஒப்பந்தகாரர் 2010 ஆகஸ்ட் 30 இல் 2010 ஒக்தோபர் 31 வரை கால நீடிப்புக் கோரியிருந்ததுடன் பாடசாலை வேலைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2010 சனவரி 24 முதல் 2010 ஆகஸ்ட் 29 வரையான காலத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) மிகைக் கொடுப்பனவுகள்

வாக்குப்பணப் பேரேட்டின்படி, பெறக்கூடிய ஏற்பாடுகளிற்கு மேலாக ரூபா 4,727,544 ஆல் கொடுப்பனவுகள் விஞ்சியிருந்ததுடன் கொடுப்பனவுகள் செய்வதற்கு முன்னர் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது ரூபா 1,073,195 தொகையான குறித்தொதுக்கிய செயற்திட்ட நிதிகள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புத் திகதி | விபரங்கள் | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 2010/03/30 | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் | 125,080 |
| 2011/01/31 | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் | 367,429 |
| 2011/01/31 | மாகாண சபை உறுப்பினர் நிதியம் | 253,825 |
| 2011/08/10 | கல்வித் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் | 326,861 |
| மொத்தம் | | 1,073,195 |

(vi) வாகன குறிப்புப் புத்தகங்களின் பேணுமை

12 வாகனங்களின் குறிப்புப் புத்தகங்களில்இஞ்சின் இலக்கங்கள், வாகன இலக்கங்கள், எரிபொருள் நுகர்வு விபரங்கள் போன்ற அத்தகைய வாகனங்களின் விபரங்கள் பதியப்பட்டிருக்கவில்லை. இரண்டு வாகனங்கள் தொடர்பான சேவை மற்றும் திருத்த விபரங்கள் குறிப்புப் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

(vii) பாடசாலை வேலைப் பொறியியலாளரிற்காக வாகனங்களின் வாடகைக்கமர்த்தல் - வலய கல்விப் பணிப்பாளர் - திருகோணமலை

2010 நவம்பர், திசெம்பர் மற்றும் 2011 சனவரி மாதங்களின் போது 2010 இற்கான வேலைகளை பூர்த்திசெய்வதற்காக வாகனமொன்றை வாடகைக்கு பெறுவதற்கான அனுமதியைக் கோரி வேண்டுகையென்றை பாடசாலை வேலைப் பொறியியலாளர் செய்திருந்தார். எவ்வாறாயினும், 2010 திசெம்பரிற்காகவே மாகாண கல்விப் பணிப்பாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ரூபா 40,000 மாதாந்த வாடகையில் 2010 திசெம்பர் 10 இல் ஒரு வழங்குநரை கொள்வனவுக் குழு தெரிவுசெய்திருந்தது. சகல கூறுவிலைகளும் கையில் பெறப்பட்டிருந்தது. உடன்பட்டிருந்தனவா

அல்லது இல்லாதிருந்தனவா என்று அவருடைய தீர்மானத்தை கொள்வனவுக் குழு வழங்கியிருக்கவில்லை.

(viii) வலயக் கல்விப் பணப்பாளர் -மூதூர்

மிகைப் பதவியணி

கீழே தரப்பட்ட விபரங்களின்படி அங்கீகரித்த ஆளணிக்கு மேலதிகமாக கிழ் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர்

| பதவி | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | மிகை |
|---|---|---|---|
| கல்வி உதவிப் பணிப்பாளர்கள் | 08 | 10 | 02 |
| சேவையிலுள்ள ஆலோசகர்கள் | - | 12 | 12 |
| அலுவலக உதவியாளர்கள் (ஓஈஎஸ்) | 03 | 05 | 02 |
| காவலாளிகள் | 01 | 04 | 03 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | - | 01 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 00 | 01 | 01 |
| மொத்தம் | 12 | 33 | 21 |

(ஔ) வலயக் கல்விப் பணப்பாளர் - ஹோமரங்கடவெல

- பொருளிப்புக் கட்டுப்பாடு

  காகிதாதி விடயங்கள் கொள்வனவிற்கே தனியார் கேள்வியாளர் ஒருவரிற்கு இரண்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 20,145 தொகை செலுத்தப்பட்டிருந்தது, ஆனால் அந்த விடயங்கள் நுகர்வுப்பொருள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

- பொருளிருப்பு விடயங்களின் பௌதீக மீதிக்கும் பொருளிருப்பு பதிவேட்டு மீதிக்கும் இடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விடயம்** | **பௌதீக மீதி** | **பதிவேட்டு மீதி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| ஜேகே கொப்பியர்கள் ஏ3 | 02 | இல்லை | 02 |
| தட்டெழுத்து தாள்கள் | 03 | இல்லை | 03 |
| ஏ3 ஜேகே கொப்பியர்கள் | 02 | இல்லை | 02 |
| கோவை கட்டுக்கள் | 02 | இல்லை | 02 |
| கைலைற்றர்கள் | இல்லை | 04 | 04 |
| ரோனர்கள | 01 | இல்லை | 01 |
| கத்தரிக்கோல்கள் | இல்லை | 03 | 03 |
| | 10 | 07 | 17 |

(ஔ) சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு

(i) 2008 யூலை 25 ஆந்திகதிய 16/2008 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின்படி தொலைபேசி பட்டியலின் அடிப்படையில் தொலைபேசிப் பட்டியல் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தொலைபேசி அழைப்பிற்கான பட்டியல்கள் சமர்ப்பிக்காமல் 2010 மே 17 முதல் 2011 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தின் போது வதிவிட மற்றும் கையடக்க தொலைபேசிகளின் பாவனைக்காக கௌரவ அமைச்சரிற்கு ரூபா 108,698 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

(ii) முற்பணங்களின் தீர்ப்பனவு

மா.நி.வி 163(3), (ii) இன்படி முற்பணங்கள் வழங்கல்கள்/ வேலைகள் அல்லது சேவைகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் 10 வேலை நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். இல்லாவிடின் முற்பணங்கள் பொறுப்புடைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும் கீழே தரப்பிட்ட விபரங்களின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| உறுதிச்சீட்டு இலக்கம் | தொகை | முற்பணத் திகதி | செலவினத் திகதி | தீர்ப்பனவுத் திகதி | தாமதமான நாட்கள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | |
| 05/13 | 5,000 | 2011.05.05 | 2011.05.08 | 2011.09.16 | 130 |
| 05/42 | 6,000 | 2011.05.30 | 2011.05.31 | 2011.10.31 | 152 |
| 06/69 | 5,000 | 2011.06. 29 | 2011.07.02 | 2011.10.31 | 120 |
| 09/27 | 30,000 | 2011.09.16 | 2011.09.19 | 2011.11.30 | 71 |
| 09/47 | 5,000 | 2011.09.29 | 2011.10.01 | 2011.11.19 | 44 |
| 09/27 | 30,000 | 2011.09.16 | 2011.10.22 | 2011.11.30 | 38 |

(∴) மாகாண பிரதி சுகாதார சேவைகள் பிணிப்பாளர் அலுவலகம்

(i) தகுதிக்கு மேலாக அலுவலக வாகனங்களை பயன்படுத்தல்

2008 யூலை 25 ஆந் திகதிய 16/2008 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின்படி கௌரவ அமைச்சர் பாதுகாப்பிற்கான வாகனங்கள் உள்ளடங்க 03 வாகனங்கள் பயன்படுத்துவதற்கு தகுதியுடையவர். எவ்வாறாயினும் கௌரவ சுகாதார அமைச்சர் 3 வான்கள், ஒரு மைக்றோ கார், ஒரு லான் குறுசர் மற்றும் ஒரு கப் வாகனம் போன்ற அத்தகைய ஆறு அலுவலக வாகனங்களை பயன்படுத்தியிருந்தார். மேலும், மேற்குறித்த ஆறு வாகனங்களின் வாகன லொக் புத்தகங்கள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் (ஆர்டிஎச்எஸ்) பாலியல் துஸ்பிரயொக நோய் வைத்திய (எஸ்ரிடி) நிலையம் மற்றும் மனநல சுகாதார நிலையம் என்பவற்றின் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் (எச்எஸ்டிபி) கீழ் சுகாதார அமைச்சால் ரூபா 6 மில்லியனிற்கு வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வாகனங்கள் தொடர்புபட்ட செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(க) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(i) 2011 யூன் மாதத்திற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி இனங்காணப்படாத பெறுவனவுகளாக ரூபா 1,395,007 ஆன தொகை காட்டப்பட்டிருந்ததுடன் மாற்றப்படாத வைப்புக்களாக ரூபா 40,712 ஆக தொகை காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 திசெம்பர் 31 வரை அந்த இனங்காணப்படாத பதிவுகளை ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஹோமரங்கடவெல கிராமிய வைத்தியசாலை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வைத்தியசாலையின் நிலப் பகுதிற்கு மெல் மலசல கூடங்களிலிருந்து கழிவு நீர் வழங்தோடியிருந்தது.
- தொழிலாளர்களால் மலசல கூடங்கள் துப்பரவு செய்யப்பட்டிருக்கவில்லை.
- வடிகாலமைப்பு முறைமை முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் நுளம்புகளின் வளர்ச்சி தலைதூக்கியிருந்தது.

வைத்தியசாலைக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் அதிகாரிகளால் பயனள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று இது தொடர்பில் பிஎச்ஐ விளக்கமளித்தார்.

(கா) எம்ஓஎச் அலுவலகம் - திருகோணமலை

(i) விடுமுறைப் பதிவேட்டின் பேணுகை

சில எம்னுஎச் உத்தியோகத்தர்களிற்கான விடுமுறை விண்ணப்பம் தாபனவிதி கோவையின்படி முறையாக படிவம் ஜீ 125 அ இல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர்களின் குறுகிய விடுமுறை அதிகாரமுள்ள உத்தியோகத்தரால் அங்கீகாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உத்தியோகத்தர்கள் விடுமுறை பெறுகின்ற போது முறையான பதில் கடமை ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வாகனப் பாவணை

வாகன ஓட்ட அட்டவணையின்படி ஒரு வாகனத்திற்கான எரிபொருள் நுகர்வு ஒரு லீற்றரிற்கு நான்கு மைல்களாக இருந்தது. எவ்வாறாயினும், 1990 ஒத்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடைவ ஒரு இயந்தி பொறியியலாளரால் எரிபொருள் நுகர்வை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மருந்துகளின் குறைவு மற்றும் மிகை

எம்ஓஎச் அலுவலகத்தின் மருந்துக் களஞ்சியத்தில் 2011 நவம்பர் 08 இல் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கீழே தரப்பட்ட விபரங்களின்படி குறைவுகளாக மற்றும் மிகைகளாக பெறுமதியிடக்கூடிய மருந்துகள் அவதானிக்கப்பட்டன.

| **மருந்து விடயம்** | **புத்தகத்தின் படி மீதி** | **உள்ள படியான மீதி** | **குறைவுகள்** | **மிகைகள்** |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** |
| கல்சியம் லக்ரபிள் மாத்திரை | 19,000 | 18,000 | 1,000 | - |
| மெபன்டசோலி மாத்திரை | 100 | இல்லை | 100 | - |
| கைதவிர்க்கவேண்டிய ஸ்பிறிங் 3 மிலீ | 100 | 180 | - | 80 |
| ஐயூடி | 150 | 100 | 50 | - |
| கையுறைகள் அளவு 7 | 200 | 360 | - | 160 |
| | 19,550 | 18,640 | 1,150 | 240 |

(iv) வைத்திய நிலையங்களின் செயற்பாடு

குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களால் நாளாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திரிபோசாவின் பெறுவனவு மற்றும்

வழங்குதல் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. கற்பிணித் தாய்மார்களின் வருகைதரும் அட்டைகளின்படி, ஜின்னாநகர, ஜமாலியாபுரம் மற்றும் மடத்தடி வைத்திய நிலையங்களில் குறைவான வருகைகள் அவதானிக்கப்பட்டன.

(கி) சுதேச மருத்துவ திணைக்களம்

(i) பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

ஒரு வான் மற்றும் ஒரு சிறிய உழவு இயந்திரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலமாக பயன்படுத்தமல் இருக்க விடப்பட்டிருந்தது.

(ii) கைவிடப்பட்ட செயற்த்திட்டம்

காத்தன்குடியில் 2010 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ரூபா 1,229,000 கிரயத்தில் இரண்டு சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,458,000 ஆன தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதேதொகை உரிய அதிகாரியின் அங்கீகாரம் பெறப்படாமல் 2011 ஆம் ஆண்டின் போது காணி மட்டப்படுத்தலிற்காக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், காணியின் உரிமையாண்மை காத்தான்குடி நகரசபையிடமிருந்து மாற்றப்பட்டிருக்கவில்லை.

(கீ) விளையாட்டுத் திணைக்ளம்

கொள்வனவுக் குழுக் கூட்டம்

- விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் குழுக் கூட்டம் 2011 யூன் 08 இல் பி.ப 2.30 இல் நடைபெற்றிருந்தது. எவ்வாறாயினும், வருகைப்பதிவேட்டின்படி, கொள்வனவுக் குழுவின் தலைவர் மற்றும் ஒரு உறுப்பினர் அதே திகதியில் வேலைக்கு வருகைதந்திருக்கவில்லை.
- அலுவலக வாகனங்களின் திருத்தங்களிற்கான கொள்வனவுக் குழுக் கூட்டம் 2011 திசெம்பர் 31 இல் மு.ப 10 இல் நடைபெற்றிருந்தது. ஆனால், வருகைப் பதிவேட்டின்படி, ஒரு உறுப்பினர் பி.ப 1.00 இலேயே அலுவலகத்திற்கு கடமைக்காக வருகைதந்திருந்தார்.
- பயிற்சியளித்தல் சப்பாத்திற்கன கொள்வனவுக் குழுக் கூட்டம் 2011 ஆகஸ்ட் 30 இல் மு.ப 10.30 இல் நடைபெற்றிருந்தது. எவ்வாறாயினும் கொள்வனவுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் கூட்டக்

குறிப்பில் கையொப்பமிட்டிருந்தார், ஆனால் உறுப்பினர் குறித் அந்த நாளில் விடுமுறையில் இருந்தார்.

(கு) விவசாய அமைச்சு

(i) கிழக்கு மாகாண அமைச்சின் ஊடாக நடாத்தப்பட்ட 2011 கிழக்கு – விவசாய கண்காட்சி

- ஆளணி வேதனங்கள் கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காக பிரதி பிரதம செயலாளர் - நிதி ஆல் அமைச்சிற்கு 2011 யூன் 20 இல் ரூபா 2 மில்லியன் தொகை விடுவிக்கப்ட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்குறித்த நிதிகள் மா.நி.வி 201 இற்கு மரணாக அதே நாளில் (2011 யூன் 20) கிழக்கு விவசாயத்திற்கு முழுமையாக முற்பண மளிக்கப்பட்டிருந்தது.
- முற்பண கொடுப்பனவுத் திகதிக்கு பின்னருள்ள 2011 யூலை 07 தனியார் பகுதியனருடன் விவசாய அமைச்சு செயலாளரால் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு செய்யப்பட்ட 2 நாட்களின் பின்னர் முற்பணக் கொடுப்பனவுக்கான சான்றுபடுத்தல் செய்யப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

(ii) போதிய அதிகாரம் இல்லாமல் பிடிகாசு விடுவித்தல்

02 பதவிநிலை உத்தியோகத்தர்களின் சாறுபடுத்தல் இல்லாமல் ரூபா 45,203 தொகையான பிடிகாசு விடுவிக்கப்பட்டிருந்ததென்று ஈஎன்/ரீஎன்/டி/எம்ஏ/2011/ஏகியூ/01 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலளிக்கையில், அமைச்சு செயலாளருயைட கையொப்பம் உள்ளடங்க 02 சான்றுபடுத்தல் உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டின் நிழற்படப் பிரதி அனுப்பப்பட்டிருந்தது. எவவாறாயினும், அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டில் எவ்வித கையொப்பமும் இல்லாமல் கணக்காய்வாளர் திணைக்களத்தின் பொறுப்பில் இதுவரை மூல கொடுப்பனவு உறுதிச்சீட்டு உள்ளது.

(கூ) விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதர திணைக்களம்

(i) மிகைக் கொடுப்பனவு

வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின்படி, 50 % உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளிற்கு காளை எருதுகள் வழங்வதற்காக செயற்பாடு இருந்தது. உப பகுதி மொத்த எருதுகளின் கிரயத்தில் 50 % அக இருக்க வேண்டியதுடன் நலனாளி ஒருவரிற்கு ரூபா 10,000 இற்றுத் அதிகமாக இருக்க வேண்டியதில்லை. இது தொடர்பில், ரூபா 316,143 ஆன மேலதிக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| மாவட்டம் | செலுத்த வேண்டிய அதிகூடிய தொகை | செலுத்தப்பட்ட உண்மையான தொகை | மிகைக் கொடுப்பனவுகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| திருகோணமலை | 87,850 | 120,773 | 32,923 |
| மட்டக்களப்பு | 357,028 | 640,248 | 283,210 |
| | 444,878 | 761,021 | 316,143 |

(ii) குறிக்கோள்களை அடைதல்

50 % உப நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் வறுமையுடன் வாழ்கின்ற மக்களிற்கு ஆதரவளிப்பதாக உள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திணைக்களம் பண்ணையிலிருந்து ஒரு நாள் கோழிக் குஞ்சுகளை கொள்வனவு செய்து நலனாளிகளிற்கு அவற்றினை வழங்குகின்றது. திணைக்களம் ஒரு கோழிக் குஞ்சு ரூபா 90 படி வாங்கியிருந்ததுடன் சில நலனாளிகளிற்க ஒரு கோழிக் குஞ்சு ரூபா 45 இற்காக செலுத்த வேண்டியிருந்தது. பண்ணை அத்தியட்சகரின் அறிக்கைப்படி, ஒரு நாள் கோழிக்குஞ்சின் கிரயம் ஏறத்தாழ ரூபா 34 ஆக இருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் நட்டத்தில் உள்ளதென்று காட்டுகிறதென மேற்குறிப்பிட்ட விபரங்களை கருத்துகின்றது.

## 2.5 நிதிகளின் பயன்படுத்துகை

மாகாண சபை அலுவலகங்களின் அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளுக்காக பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் மற்றும் அதன் மீது ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன. எவ்வாறாயினும் குறித்த நோக்கத்திற்காக மிகுதி பணத்தினைப் பயன்படுத்தவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **விடயத்தின் விபரம்** | **ஏற்பாடு** | **உள்ள படியான செலவினம்** | **சேமிப்பு** | **பயன்படுத்துகைகளின் நூற்றுவீதம்** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **%** |
| (i) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டிஜி) | 850,000,000 | 712,750,000 | 107,250,000 | 87 |
| (ii) | கல்வித்துறை அபிவிருத்தி செயல்திட்டம் (ஈஎஸ்டிபி) | 80,500,000 | 58,876,300 | 21,623,700 | 73 |
| (iii) | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசெவ்) | 293,000,000 | 187,982,471 | 105,017,529 | 64 |
| (iv) | பிரமாண அடிப்படையிலான மானியம் (சிபிஜி) | 250,000,000 | 230,000,000 | 20,000,000 | 92 |
| (v) | கிழக்கு மாகாணத்தில் கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம்/ ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (யூஎன்எவ்பிஏ) | 88,000,000 | 10,953,615 | 77,046,385 | 12 |

## 2.6 செயலாற்றல் அறிக்கைகள்

2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை என்பவற்றின்படி உரிய திகதிகளில் 2008 முதல் 2010 வரையான ஆண்டுகளிற்காக ஒவ்வொரு அமைச்சக்கள் மற்றும் திணைக்களங்கள் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் அண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பதினைந்து மாகாண சபை திணைக்களங்களால் 2012 செப்தெம்பர் 15 வரை கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அமைச்சு மற்றும் திணைக்களங்களில் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட வேணடுமென நட்டங்கள் மற்றும் சேதங்களாக இனங்காணப்பட்ட ரூபா. 1,554,137 தொகை அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாண நிதி விதிகள் 69 இன்படி நட்டங்களைக் பதிவழிக்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளூராட்சி அதிகாரசபையின் செயற்பாடுகள் மீதான மேற்பார்வை

இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாம் திருத்தத்தின் எட்டாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை மாகாணசபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மீளாய்வாண்டின் போது 12 உள்ளூராட்சி அதிகாரசபைகள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்காக வருடாந்தக் கணக்குகளை சமர்ப்பித்திருந்தன. மேலும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள 01 உள்ளூராட்சி அதிகாரசபையின் வருடாந்தக் கணக்குகள் 2012 செப்தெம்பர் 21 வரை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது தலைமைச் செயலாளர் அல்லது கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உள்ளகக் கணக்காய்வுக்காக ஒரு வினைத்திறனும் அர்த்தமுள்ள முறைமையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சந்தைக்கட்டிட நிர்மாணம் - ரூபா 5.84 மில்லியன்

ரூபா 5,830,887 கிரயத்தில் திருகோணமலை நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் 7 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் இருக்கின்றதுடன் வேறு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

(உ) வருமான நிலுவைகள் - ரூபா 311,216,129

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வீதவரி, வாடகைகள் மற்றும் ஏனைய வருமானங்களின் நிலுவைகள் கீழே தரப்பட்ட விபரங்களின்படி அறிக்கையிடப்பட்டன.

| **உள்ளூராட்சி அதிகாரசபை** | **உள்ளூராட்சி அதிகார சபைகளின் எண்ணிக்கை** | **தொகை** |
|---|---|---|
| | | **ரூபா** |
| மாநகர சபைகள் | 03 | 63,768,478 |
| நகரசபைகள் | 05 | 144,433,829 |
| பிரதேச சபைகள் | 37 | 103,013,822 |
| மொத்தம் | 45 | 311,216,129 |

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளால் ரூபா 311,216,129 தொகையான நிலுவையாகவுள்ள வருமானங்களான சேகரிப்பதற்கு அர்தமுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீதி மன்ற தண்டப்பணங்களும் முத்திரை தீர்வைகளும்

நியதிச்சட்ட ஏற்பாடுகளின்படி உள்ளூராட்சி அதிகார சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீதி மன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் விதிக்கப்பட்ட ஆதனங்கள் மாற்றம் தொடர்பான முத்திரைத் தீர்வைகள் உரிய தேவைகளைச் செய்யாமை காரணமாக உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பப்படாமல் அவர்களால் வைத்திருக்கப்பட்டன. 2011 திசெம்பர் 31 இல் அறவிடப்பட்டிருக்காத நீதி மன்ற தண்டப்பணங்களினதும் முத்திரை தீர்வைகளினதும் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| உள்ளூராட்சி அதிகாரசபைகள் | தொகை |
|---|---|
| | ரூபா |
| மாநகர சபைகள் | 42,928,887 |
| நகரசபைகள் | 6,095,231 |
| பிரதேச சபைகள் | 81,407,751 |
| மொத்தம் | 130,431,869 |

(ஊ) உள்ளூராட்சி அதிகார சபைகளின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே பொழிப்பாக்கப்படுகின்றன.

(i) சுனாமிக்குப் பின்னர் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து (என்ஜிஓ) விசேடமாக நன்கொடைகளாகவும் அன்பளிப்புகளாகவும் பெறப்பட்ட சொத்துக்களும் பொருட்களும் முறையாகப் பொருளிருப்பு புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) விசேடமாக சுனாமிக்குப் பின்னர் பல்வேறு நிறுவனங்களால் / அரசசார்பற்ற நிறுவனங்களால் உரிய அதிகாரமின்றி உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மனிதவளங்கள் பயன்படுத்தப்பட்டன.

(iii) மாகாண ஆணையாளரின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரித்தலில் அசாதாரண தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் துணையேடுகள் அல்லது பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) உத்தியோகபூர்வ வாகனங்களை உபயோகிக்க உரித்தற்ற பல உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் உத்தியோக பூர்வ வாகனங்களை உபயோகித்திருந்தனர்.

(vii) உள்ளூராட்சிச் சபைகள் தமது சொந்த தொழிலாளர் அணியைப் பயன்படுத்தி நிருமாண வேலைகளை நிறைவேற்றியிருந்தன. ஆகையினால் பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு அல்லது இருப்புக் கட்டுப்பாடு எதுவும் இருக்கவில்லை. இதன் காரணமாக, இருப்பு நிலைமை மெய்மையாய்வு மற்றும் இருப்பின் குறைவுகள் / மேலதிகங்களை என்பவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மா.நி.வி 101 இன்படி மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பின்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்ட பல விடயங்கள் மீது மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

ஆளணி முகாமைத்துவம், பாதீடு, செலவினம், கொடுப்பனவுகள், மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள், வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள், சொத்துக்களின் பயன்படுத்துகை, கணக்குப் பதிவேடுகளின் பேணுகை, வங்கிக் கணக்குகள் மற்றும் கட்டுநிதி என்பவற்றின் கட்டுப்பாடு, வாகனங்களின் பயன்படுத்துகை, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் போன்றவற்றிலுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகளில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் காலத்திற்குக் காலம் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களினதும் தலைமைச் செயலாளரினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.